மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு தான் இல்லை என்ற பதிலை நான் அளித்து இருக்கிறேன். சிறப்பு நிகழ்வாகக் கருதி நிதி பற்றாக்குறை உள்ள ஒன்றியங்களிலிருந்து கோரிக்கை வருமானால் அதனை தனி நிகழ்வாக கருதி அதனை பரிசீலிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-20 மணி

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையம் ஊராட்சி ஒன்றியம், கருத்தப்பிள்ளையூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று பொதுமக்கள் பல ஆண்டுக்காலமாகக் கோரி வருகிறார்கள். அங்கே கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தினுடைய, அந்தப் பொதுமக்களுடைய கோரிக்கை அரசுக்கு பெறப்பட்ட பின் அதனுடைய தேவையினைக் கருத்தில் கொண்டு அரசு ஆய்வு செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

''உழைப்பவர் உலகம்'' பத்திரிக்கை

*9445. திரு உ. ரா. வரதராசன் :
திரு யூ. கே. வெள்ளிங்கிரி:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய வெளியீடான ''உழைப்பவர் உலகம்'' பத்திரிக்கை நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த வெளியீட்டைத் தொடர்ந்து கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு தனது ஆணை எண் 253 செய்தி மற்றும் சுற்றுலா (தமிழரசு) துறை நாள் 14—6—1989-ல் ''உழைப்பவர் உலகம்'' மற்றும் பல்வேறு அரசு துறைகளால் வெளியிடப்பட்டு வந்த பத்திரிக்கைகளை ''தமிழரசு'' ஏட்டுடன் இணைத்து வெளியிடும்படி ஆணை பிறப்பித்துள்ளது.

[1990 ஏப்ரல் 17

"தமிழரசு" இதழ் ஒவ்வொன்றிலும் "உழைப்பவர் உலகம்" என ஒரு பகுதி நான்கைந்து பக்கங்கள் தொடர்ந்து இடம் பெற வழிவகை செய்யப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு உ.ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொழிலாளர் நல வாரியத்தால் தொழிலாளர்களுக்காக நடத்தப்படுகிற பத்திரிகை. 1978-லேயிருந்து 1989 பிப்ரவரி வரையில் வந்தது. தமிழரசு பத்திரிகை, அரசினுடைய பல்வேறு அம்சங்களையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கி வரக்கூடியது. ஆகவே, தொழிலாளருக்காக, பிரத்யேகமாக வந்திருக்கக்கூடிய இந்த இதழிலே இடம்பெறக் கூடிய செய்திகளெல்லாம் அதிலே இடம்பெறுவது என்பது சாத்தியமல்ல. அதுமட்டுமின்றி, இதற்காக, ஆயுள் சந்தா எல்லாம் கட்டப்பட்டிருக்கக்கூடிய நிலைமையிலே இந்தப் பத்திரிகையை மீண்டும் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஒரு முடிவு எடுத்து, அரசின் சார்பாக நடத்தப்படுகின்ற உழைப்பவர் உலகம், விளையாட்டு மடல், தமிழ்க்கல்வி, கோழி கூவுது, கிராம வளர்ச்சி போன்ற பல்வேறு பத்திரிகைகளை, தமிழரசுடன் இணைத்து வெளியிட வேண்டுமென்று ஆணை பிறப்பித்து இருக்கிறது. ஆனால், இது முழுக்க முழுக்க தொழிலாளர் நல வாரியத்தின் மூலமாக நடத்தப்படுகின்ற பத்திரிகை என்றும், இதனை, தனியாக நடத்த அனுமதி தேவை என்றும் தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்துகொண்டு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை பரிசீலிக்கலாம்.

திரு யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உழைப்பவர் உலகம்" பத்திரிகை முழுமையாக தமிழகத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய பல்வேறு ஒப்பந்தங்கள், தொழிலாளர் நலச் சட்டங்கள் அமல்படுத்தக்கூடிய முறைகள் போன்று இருக்கக்கூடிய பல நல்ல காரியங்களெல்லாம் அந்த "உழைப்பவர் உலகம்" பத்திரிகையில் வந்தன. ஆகவே அது தமிழகம் முழுவதும் உள்ள தொழிலாளர்கள் பயன்பெறக்கூடிய முறையிலே இருந்து வந்தது. ஆகவே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், தமிழக முதலமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு அந்த "உழைப்பவர் உலகம்" பத்திரிகையை தனியாகக் கொண்டு வந்தால் தொழிலாளர் கேள்வி-பதிலும் அதில் வரும். கோர்ட் தீர்ப்புகள் அதிலே வரும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொண்டு அதை உடனடியாக கொண்டு வர அரசு விரும்புகிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு கே. என். நேரு : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

மேல்புறம் பஞ்சாயத்து கைதகம் இராமம் வழி செல்லும் அருமலை மஞ்சாலுமூடு சாலை.

வினா எண். 418—திரு. செ. நூர் முகமது : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மேல்புறம் பஞ்சாயத்து, கைதகம் கிராமம் வழி செல்லும் அருமலை - மஞ்சாலுமூடு சாலையைச் செப்பனிட்டுக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) 1981-82 ஆம் ஆண்டுகளில் தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தில் இச்சாலையை எடுத்து முழுமையாக்கப்படவில்லை என்பது அரசு அறியுமா ?

(இ) இச்சாலையை மக்களுக்குப் பயனளிக்கும் முறையில் அமைப்பதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில் 1981-82 ஆம் வருடத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இச்சாலையில் கலங்கு கட்டும் வேலை மட்டும் செய்யப்பட்டது. மேற்கொண்டு போதுமான ஒதுக்கீடு இல்லாததால் இச்சாலையினை மேம்படுத்தும் வேலை செய்யப்படவில்லை.

(இ) மஞ்சாலுமூடு கைதகம், தட்டாம்கோணம் சாலையினை மேம்பாடு செய்யும் வேலை 1989–90 ஆம் வருட ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 2,47,300/- மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

2—

அருமனை அரசு மருத்துவமனை.

வினா எண். 425—திரு. செ. நூர் முகமது : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—